[1993 ஏப்ரல் 28

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் நான் ஒரு முறை பெங்களூர் சென்றபோது திருவள்ளுவர் பேருந்தில் சீட்கேட்ட போது இங்கே அந்த ஆணை இல்லை தமிழ்நாட்டுக் மட்டும் தான் அந்த ஆணை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் போகும்போது சட்டமன்றத்திலே கூட விதிகளின்படி சட்டமன்ற உறுப்பினர்கள் வந்தால் மரியாதை கொடுக்கவேண் வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் மரியாதை கூட பெங்களூரில் கொடுக்கப்படுவதில்லை. எனவே பெங்களூரில் இருந்து வருவதற்கும் இந்த ஆணை இடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல் அங்கே வேலை செய்யும் டைம்கீப்பர்கள் போன்றவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் வந்தால் மரியாதை கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற பகுதிகளிலே தான் சுற்றிக்கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. வேறு மாநில மாநிலத்திற்குச் செல்கிறபோது. உரிய மரியாதை தரப்பட வில்லை என்று சுட்டிக் காட்டுவார்களேயானால் அவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 507 திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

507—

பாப்பான்விடுதி வனத்துறைக்குச் சொந்தமான முந்திரிக் காடுகள்.

*10214—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் பாப்பான்விடுதியில் உள்ள வனத்துறைக்குச் சொந்தமான முந்திரிக் காடுகளின் 1990—91-ம் ஆண்டின் வருமானம் என்ன?

(ஆ) அந்தக் காடுகள் எந்த முறையில் ஒப்பந்தத்திற்கு விடப்படுகிறது?

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் பாப்பான்விடுதி அருகில் உள்ள ராசிமங்கலம் முந்திரி உற் பத்தித் தோட்டத்தில் ரூ. 66,495 வருமானம் கிடைத் துள்ளது.

(ஆ) பொதுவாக முந்திரி மகசூல் செய்யும் உரிமத்தை தோட்ட வாரியாக பிரித்து பொது ஏலம் மூலமோ, டெண்டர் மூலமோ அல்லது இரண்டு முறைகளையும் சேர்த்தோ விற்கப் படுகிறது.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, அதிலே வருமானம் வந்ததைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்குள்ள நிர்வாகச் செலவு எவ்வளவு? அந்த காட்டில் நீங்கள் எவ்வளவு லாபம் பெற்றிருக் கிறீர்கள்? எந்த முறையில் டெண்டர்களை அனுமதிக் கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெண்டர் முறை என்று உங்களிடத்திலே முதலில் குறிப்பிட்டேன். பொது ஏலம் மூல மாகவும், டெண்டர் மூலமாகவும் அல்லது இரண்டு முறை களிலும் சேர்ந்து விற்கப்படுகிறது என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முந்திரித் தோட்டத்தைப் பொறுத்தவரையிலே ஏறத்தாழ 5ஆயிரம் ஹெக்டேர் நிலங்களிலே நாம் முந்திரி பயிரிட்டுக்கொண்டிருக்கிறோம். அதோடு பல்வேறு ரகமான, மரக்கூழ்கள், அதே போல பல்வேறு பயிர்களை நாம் அந்த பகுதியிலே பயிரிட்டு வருகின்ற காரணத் தினாலே, அதிலே வந்திருக்கின்ற லாபம், இந்த ஆண்டு 1992—93-ல் மட்டும் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் அரசுக்கு வரி செலுத்தி யதுபோக அதிலே லாபம் 52 லட்சம் ரூபாய்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 52 லட்சம் ரூபாய் லாபம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். புதுக் கோட்டை மாவட்டத்தில் 5 லட்சம் ஏக்கருக்கு மேல் முந்திரி சாகுபடி செய்திருப்பதாகவும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பல இடங்களில் ஒப்பந்தக்காரர்கள் வெளியிலே தங்களுக் குள்ளேயே ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு அரசுக்கு வருமானத்தைக் குறைக்கிற வகையில் கட்டுப்பாடாக இருந்து ஏலம் கேட்கிற முறை இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் குறைத்து கேட்டு அவர்கள் தங்களுக்குள்ளேயே கொள்ளை யடித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்று

வதற்கு நேரடியாக ஏலம் விடுவதை ரத்து செய்துவிட்டு டெண்டர் முறையை மட்டும் அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த டெண்டர் முறையையும் நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். நீங்கள் சொல்வதைப்போல, பொது ஏலத்திலும் விடுகிறோம். டெண்டர் முறையையும் நாம் பின்பற்றுகிறோம். ஆக இரண்டும் சேர்ந்து அந்த முறைகளிலேதான் நாம் விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது இப்போது 5 லட்சம் ஏக்கர் என்று சொன்னார்கள். இல்லை. 5 ஆயிரம் ஹெக்டேர். 5 லட்சம் ஏக்கருக்கு எங்கே செல்வது? இருக்காது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், வனப்பரப்பே, இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு பகுதிகளை நாம் ஒப்பிட்டுப்பார்க்கிறபோது 17.5 சதவிகிதம் தான் இருக்கிறது. குறைந்த வனப் பரப்புகள் தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போல போன ஆண்டு 1991—92-ல், 45 லட்சம் ரூபாய் அரசுக்கு செலுத்திய வரிப் போக லாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆண்டு அரசுக்கு, $3\frac{1}{2}$ கோடி ரூபாய் லாபம் ஈட்டுகிற நேரத்தில், வரி போக ரூ. 52 லட்சம் என்று குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : வினா எண் 508. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

508—

கைத்தறி நெசவுத்தறிகளை பழுதுபார்க்க அரசு உதவி,

*13491—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவுத்தறிகளை பழுதுபார்க்க அரசே உதவி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத்தறிகளை பழுது பார்க்க நிதி உதவி ஏதும் செய்வது இல்லை.